தயாரிக்கின்ற தொழிற்சாலைகள் எல்லாம் அமைந்துள்ளன என்பதெல்லாம் எங்களுக்கு நன்றாகத் தெரியும். அப்படிப் பெரிய தொழிற்சாலைகள் அமைந்திருக்கின்ற காரணத்தால் அந்தப் பகுதியிலே குறைந்த விலைக்கு அரசு மதிப்பிலான விலைக்கு, பேருந்து நிலையம் அமைப்பதற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும் மாண்புமிகு உறுப்பினர்களும், இடத்தை வாங்கிக் கொடுத்தால் நிச்சயமாகப் பேருந்து நிலையம் அமைப்பதற்கு இந்த அரசு முன்வரும் என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. ஹக்கீம், இடத்தை வாங்கிக் கொடுக்க முயற்சி பண்ணுவோம். அதற்குள்ளே நீங்கள் இடத்தை அபகரித்து விடாதீர்கள். (சிரிப்பு)*

திரு. எம்.ஏ. ஹக்கீம்: *இல்லை, இல்லை. (சிரிப்பு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 177, திரு. அ.இரா. மலையப்பசாமி மற்றும் செல்வி சி. கனகதாரா, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.*

177—

பணியிடங்கள் நிரப்புதல்

***9634—திரு. அ. இரா. மலையப்பசாமி:**
செல்வி சி. கனகதாரா:

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளாண்மைத் துறையில் சுமார் 300 வேளாண்மை அலுவலர் பணியிடங்கள் காலியாக உள்ளன என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அவை எப்பொழுது நிரப்பப்படும்?

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ): ஆம், வேளாண்மை அலுவலர் பணியிடங்கள் 418-ம், வேளாண்மை அலுவலர் (வேதியியல்) பணியிடங்கள் 70-ம் காலியாகவுள்ளன.

2002 ஏப்ரல் 19]

(ஆ) பணியாளர்களைப் பணி நியமனம் செய்யத் தடை இருப்பதால் தற்போது காலிப் பணியிடங்களை நிரப்ப இயலாது என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அ. இரா. மலையப்பசாமி.

திரு. அ.இரா. மலையப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது தமிழகத்திலே சுமார் 7000 விவசாயப் பட்டதாரிகள் வேலைவாய்ப்பு இல்லாமல் உள்ளனர். வேளாண்மைப் பட்டதாரிகளை உருவாக்க நமது அரசு அதிகப்படியான தொகையினைச் செலவு செய்து வருகிறது. ஆகவே தமிழ்நாடு அரசு முக்கிய திட்டமாகச் செயல்படுத்தத் திட்டமிட்டிருக்கும் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தில் வேளாண்மைப் பட்டதாரிகளை நியமித்து வேளாண்மைத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்றும், ஒரே வேளாண்மை அதிகாரி இரண்டு அல்லது மூன்று பணியிடங்களில் பணி செய்வதால் முழுமையாகப் பணியாற்ற இயலவில்லை என்றும், ஆகவே காலியாக உள்ள பணியிடங்களில் புதிதாக வேளாண்மைப் பட்டதாரிகளை நியமிக்கக் கேட்டுக்கொள்வதுடன் 28 ஆண்டுகளாகப் பதவி உயர்வு இல்லாமல் உள்ள வேளாண்மை அதிகாரிகளுக்குப் பதவி உயர்வு வழங்க வேண்டும் என்று கேட்டு, மாண்புமிகு முதலமைச்சரின் திட்டமான தோட்டக்கலை வளர்ச்சி இயக்கத் திட்டத்தில், வேளாண்மைக் கல்லூரிகளில் தோட்டக்கலைத் துறையில் பட்டம் பெற்று பல ஆண்டுகளாக வேலையில்லாமல் உள்ள தோட்டக்கலைப் பட்டதாரிகளை நியமிக்க அரசு..... (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மலையப்பசாமி, தோட்டக்கலை, தனிக் கேள்வி போடுங்கள். இந்த இரண்டு கேள்விகளுக்குப் பதில் சொல்லுங்கள், அமைச்சர்.

திரு. அ.இரா. மலையப்பசாமி: அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மை விரிவாக்க அலுவலர், வேளாண்மை அலுவலர் (வேதியியல்) பணியிடங்களுக்குத் தமிழ்நாடு தேர்வாணையத்தின் மூலம் தேர்வு நடத்தி நியமனம் செய்யப்படுகின்றன. 10 பணியிடங்கள் காலியாக இருந்தால் 9 பணியிடங்கள் நேரடி நியமனம் மூலமும் ஒரு பணியிடம்

பதவியில் இருப்பவர்கள் மூலமும் நிரப்பப்படுகின்றன. எதிர்பார்க்கிற காலியிடங்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாகத் தேர்வு நடத்தப்படுகிறது. 1997-98 ஆம் ஆண்டு வேளாண்மை விரிவாக்க அலுவலர் 56-இடங்கள், வேளாண்மை அலுவலர் (வேதியியல்) 31 இடங்கள், 1998-99 ஆம் ஆண்டு வேளாண் அலுவலர்கள் 32 இடங்கள் ஆக 119 இடங்கள் காலியாக இருந்தன. அந்த இடங்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் -T.N.P.S.C. மூலமாகத்—தேர்வுகள் நடைபெற்று தற்போது 119 வேளாண்மை அலுவலர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளார்கள் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-40)

செல்வி சி. கனகதாரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாய்ப்புக்கு நன்றி. செந்தமிழே, தேனே, என் உயிரினை, செயலினை, மூச்சினை உமக்களித்தேனே.

'சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்'

என்றும்

'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்.'

என்றும் வள்ளுவன் சொல்லியிருக்கிறார். கடந்த கால ஆட்சியிலே கடனிலே பிறந்து, கடனிலே வளர்ந்து, கடனிலே உயிரை மாய்த்துக் கொண்ட சிறு, குறு விவசாயப் பெருங்குடி மக்களுக்கு மனிதப் புனிதவதி, மக்கள் போற்றும் மாபெரும் தலைவி, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) 311 கோடி ரூபாயைத் தந்து அவர்கள் வாழ்க்கையிலே ஒளியேற்றி வைத்துவிட்டார்கள். அதனைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், உலகப் புகழ் பெற்ற விஞ்ஞானியை, வேளாண்மைத் துறையிலே உலக அளவிலே அதிக பட்டங்கள் பெற்ற அத்தகைய ஒரு விஞ்ஞானியை —தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 50 இலட்சம் ஏக்கர் நிலம் — The Waste Land Development Scheme-க்குத் தலைமையாகப்போட்டு அமல்படுத்தியுள்ளார்கள் என்பதை மிகப் பெருமையோடு சுட்டிக்காட்ட விழைகின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறையிலே சுமார் 300 வேளாண்மை அலுவலர் பணியிடங்கள் காலியாக உள்ளன என்பதை எனக்கு மகஜர் மூலமாக

2002 ஏப்ரல் 19]

அனுப்பி அந்தத் துறையிலே இருக்கிற சங்கத்தைச் சேர்ந்த பொறுப்பாளர்கள் என்னை அணுகிக் கேட்டார்கள். B.Sc., (Agri.), M.Sc. (Agri.) அதிலே Ph.d., அதாவது முனைவர் பட்டங்கள் எல்லாம் பெற்றுவிட்டு மாணவர்கள் வேலை இன்றி தவித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதனைக் கருத்தில் கொண்டு இவர்களுக்குக் கூடுதலாகப் பணியிடம் கொடுக்க அரசு ஆவன செய்யுமா, முன்வருமா, என்று தங்கள் மூலமாக அறிந்துகொள்ள நான் விழைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செல்வி கனகதாரா, உட்காருங்கள், அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே இதற்குப் பதில் சொல்லிவிட்டார்கள். உட்காருங்கள்.

வினா எண் 178, திரு. கே.சி. கருணாகரன் மற்றும் திரு. கா.பூ. முனுசாமி, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

178—

முதியோர் இல்லங்கள்

***1533—திரு. கே.சி. கருணாகரன்:**
திரு. கா.பூ. முனுசாமி:

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முதியோர் இல்லங்கள் ஏற்படுத்த அரசு சாரா அமைப்புகளை ஊக்குவிப்பதுடன் மாவட்டத்திற்கு ஒன்றிரண்டு இல்லங்களை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

முதியோர் இல்லங்கள் நடத்திட தொண்டு நிறுவனங்களை ஊக்குவிப்பது என்பது மாநில அரசின் திட்டங்களில் ஒன்றாகும். 25-05-2001 அன்று மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையில் இத்திட்டம் குறித்து வலியுறுத்தப்பட்டதற்கு ஏற்ப மாவட்டந்தோறும் முதியோர் இல்லங்கள் அமைக்க படிப்படியாக அரசு நடவடிக்கை எடுக்க உள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக, 2001-2002-ல் 4 முதியோர் இல்லங்கள் தொடங்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS